## இனிமையான குழந்தைகளே - பாபா குழந்தைகளாகிய உங்களை துக்க தாமத்தை சன்னியாசம் செய்விக்க வந்துள்ளார், இது தான் எல்லையற்ற சன்னியாசமாகும்

கேள்வி: அந்த சன்னியாசிகளின் சன்னியாசம் மற்றும் உங்களுடைய சன்னியாசத்திற்கு முள்ள முக்கிய வித்தியாசம் என்ன?

பதில்: அந்த சன்னியாசிகள் வீடு வாசலை விட்டு விட்டு காட்டிற்குச் செல்கிறார்கள், ஆனால் நீங்கள் வீடு-வாசலை விட்டு விட்டு காட்டிற்குச் செல்வதில்லை. வீட்டில் இருந்து கொண்டே முழு உலகத்தையும் முட்கள் நிறைந்த காடாகப் புரிந்து கொள்கிறீர்கள். நீங்கள் புத்தியின் மூலம் முழு உலகத்தையும் சன்னியாசம் செய்கிறீர்கள்.

ஓம் சாந்தி. ஆன்மீகத் தந்தை வந்து ஆன்மீகக் குழந்தைகளுக்கு தினம்-தினம் புரிய வைக் கின்றார், ஏனென்றால் அரைக்கல்பமாக எதுவும் புரியாதவர்களாக இருக்கின்றீர்கள் அல்லவா? எனவே தினம்-தினம் புரிய வைக்க வேண்டியுள்ளது. முதன் முதலில் மனிதர்களுக்கு அமைதி வேண்டும். உண்மையில் ஆத்மாக்கள் அனைத்தும் சாந்திதாமத்தில் இருக்கக் கூடியவை களாகும். பாபா எப்போதும் அமைதிக்கடலாக இருக்கின்றார். இப்போது நீங்கள் அமைதியின் ஆஸ்தியை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். அமைதி தேவா....... என்று சொல் கிறார்கள் அல்லவா, அதாவது எங்களை இந்த உலகத்திலிருந்து எங்களுடைய வீடாகிய சாந்திதாமத்திற்கு அழைத்துச் செல்லுங்கள், அதாவது அமைதியின் ஆஸ்தியைக் கொடுங்கள் என்பதாகும். தேவதைகளுக்கு முன்னால் அல்லது சிவபாபாவிற்கு முன்னால் சென்று அமைதியைக் கொடுங்கள் என்று சொல்கிறார்கள், ஏனென்றால் சிவபாபா அமைதி யின் கடலாக இருக் கின்றார். இப்போது நீங்கள் சிவபாபாவிடமிருந்து அமைதியின் ஆஸ்தியை அடைந்து கொண்டி ருக்கிறீர்கள். பாபாவை நினைவு செய்து-செய்து நீங்கள் கண்டிப்பாக சாந்திதாமம் செல்ல வேண்டும். நினைவு செய்யவில்லை யென்றாலும் கண்டிப்பாக செல்வீர்கள். தலையில் இருக்கும் பாவங்களின் சுமை இறக்கப்பட (அழிய) வேண்டும் என்பதற்காகவே நினைவு செய்கிறீர்கள். அமைதியும் சுகமும் ஒரு பாபாவிடமிருந்து கிடைக் கிறது, ஏனென்றால் அவர் சுகம் மற்றும் அமைதியின் கடலாக இருக்கின்றார். அவை தான் முக்கியமானதாகும். அமைதியை முக்தி என்றும் சொல்லப்படுகிறது பிறகு ஜீவன் முக்தி மற்றும் ஜீவன் பந்தனமும் இருக்கிறது. இப்போது நீங்கள் ஜீவன் பந்தனத்திலிருந்து ஜீவன் முக்தியை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். சத்யுகத்தில் எந்த பந்தனமும் இருப்பதில்லை. சகஜ ஜீவன் முக்தி மற்றும் அல்லது சகஜ கதி-சத்கதி என்று பாடப்படுகிறது. இப்போது இரண்டினுடைய அர்த்தத் தையும் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துள்ளீர்கள். சாந்திதாமத்தை கதி என்று சொல்லப் படுகிறது, சுகதாமத்தை சத்கதி என்று சொல்லப் படுகிறது. சுகதாமம், சாந்திதாமம் பிறகு இது துக்கதாமம் ஆகும். நீங்கள் இங்கே அமந்துள்ளீர்கள், பாபா கூறுகின்றார் - குழந்தைகளே, சாந்தி தாமமான வீட்டை நினைவு செய்யுங்கள். ஆத்மாக் களுக்கு தங்களுடைய வீடு மறந்து போய் விட்டது. பாபா வந்து நினைவூட்டுகின்றார். எதுவரை என்னை நினைவு செய்ய வில்லையோ அதுவரை ஆன்மீகக் குழந்தைகளாகிய நீங்கள் வீட்டிற்குச் செல்ல முடியாது

என்று பாபா புரிய வைக்கின்றார். நினைவின் மூலம் உங்களுடைய பாவங்கள் பஸ்மமாகி விடும். ஆத்மா தூய்மையாக ஆகி பிறகு தன்னுடைய வீட்டிற்குச் செல்லும். இது தூய்மையற்ற உலகம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். ஒரு தூய்மையான மனிதன் கூட கிடையாது. தூய்மையான உலகத்தை சத்யுகம் என்றும், தூய்மையற்ற உலகத்தை கலியுகம் என்றும் சொல்லப்படுகிறது. இராம இராஜ்யம் மற்றும் இராவண இராஜ்யமாகும். இராவண இராஜ்யத்தின் ஆரம்பத்தி-ருந்து தூய்மையற்ற உலகம் ஸ்தாபனை ஆகிறது. இது உருவாக்கப் பட்ட விளையாட்டல்லவா? இதை எல்லையற்ற தந்தை புரிய வைக்கின்றார், அவரைத் தான் சத்தியம் என்று சொல்லப் படுகிறது. சத்தியமான விஷயங்களை நீங்கள் சங்கமயுகத்தில் தான் கேட்கின்றீர்கள் பிறகு நீங்கள் சத்யுகத்திற்கு செல்கிறீர்கள். துவாபர யுகத்திலிருந்து இராவண இராஜ்யம் ஆரம்பமாகிறது. இராவணன் என்றால் அசுரன் ஆவான். அசுரன் ஒருபோதும் சத்தியத்தை பேச முடியாது, ஆகையினால் மாயை பொய்யானது, சரீரம் பொய்யானது என்று சொல்லப் படுகிறது. ஆத்மாவும் பொய்யானதாக இருக்கிறது என்றால் சரீரமும் பொய்யானதாக இருக்கிறது. ஆத்மாவில் சம்ஸ்காரம் நிரம்புகிறது அல்லவா? 4 உலோகங்கள் இருக்கின்றன அல்லவா - தங்கம், வெள்ளி, தாமிரம், இரும்பு..... அனைத்து அழுக்குகளும் நீங்கி விடுகிறது. மற்றபடி இந்த யோக பலத்தின் மூலம் நீங்கள் உண்மையான தங்கமாக ஆகின்றீர்கள். நீங்கள் சத்யுகத்தில் இருக்கும்போது உண்மையான தங்கமாகத்தான் இருக்கின்றீர்கள். பிறகு வெள்ளி சேரும்போது சந்திரவம்சத்தவர் என்று சொல்லப்படுகிறது. பிறகு தாமிரத்தினுடைய, இரும்பினுடைய கலப்பு ஏற்படுகிறது துவாபர-கலியுகத்தில். பிறகு யோகத்தின் மூலம் உங்கள் மீது படிந்த வெள்ளி, தாமிர, இரும்பினுடைய கலப்பு நீங்கி விடுகிறது. முதலில் ஆத்மாக் களாகிய நீங்கள் அனைவரும் சாந்திதாமத்தில் இருக்கிறீர்கள். பிறகு முதல்-முதலில் சத்யுகத் தில் வருகிறீர்கள், எனவே அதனை கோல்டன் ஏஜ் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் உண்மை யான தங்கமாவீர்கள். யோக பலத்தின் மூலம் அனைத்து கலப்புகளும் நீங்கி மீதம் உண்மை யான தங்கம் கிடைக்கிறது. சாந்திதாமத்தை கோல்டன் ஏஜ் என்று சொல்லப்படுவதில்லை. கோல்டன் ஏஜ், சில்வர் ஏஜ், காப்பர் ஏஜ் என்று இங்கே சொல்லப் படுகிறது சாந்திதாமத்தில் அமைதி இருக்கிறது. ஆத்மா சரீரத்தை எடுக்கும்போது கோல்டன் ஏஜ் என்று சொல்லப் படுகிறது பிறகு உலகமே தங்க யுகமாக ஆகி விடுகிறது. சதோபிரதான 5 தத்துவங்களின் மூலம் சரீரம் உருவாகின்றது. ஆத்மா சதோபிரதானமாக இருக்கும்போது சரீரமும் சதோபிர தானமாக இருக்கிறது. பிறகு கடைசியில் வந்து அயர்ன் ஏஜ்டாக (க-யுக) சரீரம் கிடைக்கிறது. ஏனென்றால் ஆத்மாவில் கலப்படம் சேருகிறது. எனவே கோல்டன் ஏஜ், சில்வர் ஏஜ் என்று இந்த உலகத்தை சொல்லப்படுகிறது.

எனவே குழந்தைகள் இப்போது என்ன செய்ய வேண்டும்? முதன்-முதலில் சாந்தி தாமத்திற்குச் செல்ல வேண்டும். ஆகையினால் பாபாவை நினைவு செய்ய வேண்டும், அப்போது தான் தமோபிரதானத்திலிருந்து சதோபிரதானமாக ஆவீர்கள். இதற்கு எவ்வளவு காலம் ஆகிறதோ அதுவரை பாபா இங்கு (சங்கமயுகத்தில்) இருக்கிறார். அவர் கோல்டன் ஏஜில் நடிப்பை எடுப்பதே இல்லை. எனவே ஆத்மாவிற்கு எப்போது சரீரம் கிடைக்கிறதோ அப்போது தான் இது கோல்டன் ஏஜ்டு ஜீவாத்மா என்று சொல்லப்படுகிறது. கோல்டன் ஏஜ்டு ஆத்மா என்று சொல்லப்படு வதில்லை. கோல்டன் ஏஜ்டு ஜீவாத்மா பிறகு

சில்வர் ஏஜ்டு ஜீவாத்மாவாக ஆகிறது. எனவே இங்கே நீங்கள் அமர்ந்துள்ளீர்கள், உங்களுக்கு அமைதியும் இருக்கிறது என்றால் சுகமும் கிடைக்கிறது. எனவே என்ன செய்ய வேண்டும்? துக்க தாமத்தை சன்னியாசம் செய்ய வேண்டும். இதைத் தான் எல்லையற்ற சன்னியாசம் என்று சொல்லப்படுகிறது. அந்த சன்னியாசிகளுடையது எல்லைக்குட்பட்ட சன்னியாசமாகும், வீடு-வாசலை விட்டுவிட்டு காட்டிற்குச் செல்கிறார்கள். இந்த முழு உலகமுமே காடுதான் என்பது அவர்களுக்குத் தெரிய வில்லை. இது முட்கள் நிறைந்த காடாகும். இது முட்கள் நிறைந்த உலகமாகும், அது மலர் களின் உலகமாகும். உலகில் சன்னியாசம் செய்கிறார்கள் ஆனால் இருந்தாலும் முட்கள் நிறைந்த உலகத்தில், காட்டில் நகரத்திலிருந்து தூரம்-தூரமாக சென்று வசிக்கிறார்கள். அவர் களுடையது விடுதலை (முக்திக்கான) மார்க்கமாகும், உங்களுடையது குடும்ப மார்க்கமாகும். நீங்கள் தூய்மையான ஜோடிகளாக இருந்தீர்கள், இப்போது தூய்மை யற்றவர்களாக ஆகி விட்டீர்கள். அதை குடும்ப ஆசிரமம் என்று சொல்கிறார்கள். சன்னியாசிகள் பிறகு தான் வருகிறார்கள். இஸ்லாமியர், பௌதர்கள் கூட பிறகு தான் வருகிறார்கள். கிறிஸ்துவர்களுக்கு கொஞ்சம் முன்னால் வருகிறார்கள். எனவே இந்த மரத்தைக் கூட நினைவு செய்ய வேண்டும், சக்கரத்தையும் நினைவு செய்ய வேண்டும். பாபா கல்பம் கல்பமாக வந்து கல்ப விருட்சத்தின் ஞானத்தைக் கொடுக்கின்றார், ஏனென்றால் அவரே விதையாக இருக்கின்றார், சத்தியமாக இருக்கின்றார், உயிருள்ளவராக இருக்கின்றார் ஆகையினால் கல்பம் - கல்பமாக வந்து கல்ப விருட்சத்தின் முழு இரகசியத்தையும் புரிய வைக்கின்றார். நீங்கள் ஆத்மாக்கள் ஆனால் உங்களை ஞானக்கடல், சுகக்கடல், அமைதிக்கடல் என்று சொல்லப்படுவதில்லை. இந்த மகிமைகள் ஒரு பாபாவினுடையதாகும், அவர் உங்களை அப்படி மாற்றுகின்றார். பாபா வினுடைய இந்த மகிமைகள் எப்போதைக்குமானதாகும். அவர் எப்போதும் தூய்மையாக இருக்கிறார் மற்றும் நிராகாரமாக இருக்கின்றார். கொஞ்ச காலத்திற்கு மட்டும் தூய்மையாக்கு வதற்காக வருகின்றார். சர்வவியாபியின் விஷயமே இல்லை. பாபா எப்போதும் அங்கே தான் இருக்கின்றார் என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பக்தி மார்க்கத்தில் எப்போதும் அவரை நினைவு செய்கிறார்கள். சத்யுகத்தில் நினைவு செய்வதற்கான அவசியமே இருப்பதில்லை. இராவண இராஜ்யத்தில் உங்களுடைய கூச்சல் ஆரம்பமாகிறது, அவர் தான் வந்து சுகம்- அமைதியைக் கொடுக்கின்றார். எனவே அமைதியற்ற நிலையில் மீண்டும் கண்டிப்பாக அவருடைய நினைவு வருகிறது. ஒவ்வொரு 5 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் நான் வருகின்றேன் என்று பாபா புரிய வைக்கின்றார். அரைக்கல்பம் சுகம், அரைக்கல்பம் துக்க மாகும். அரைக்கல்பத்திற்கு பிறகு தான் இராவண இராஜ்யம் ஆரம்பமாகிறது. இதில் முதல் நம்பரில் முக்கியமானது தேக-அபிமானமாகும். அதற்கு பிறகு தான் பிற விகாரங்கள் வருகின்றன. தங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள், ஆத்ம-அபிமானிகளாக ஆகுங்கள் என்று பாபா இப்போது புரிய வைக்கின்றார். ஆத்மாவினுடைய அறிமுகமும் வேண்டும். ஆத்மா இரு புருவங்களுக்கு மத்தியில் ஜொ-க்கிறது என்று மட்டும் தான் மனிதர்கள் சொல்கிறார்கள். அது அழிவற்ற மூர்த்தி, அந்த அழிவற்ற மூர்த்தி ஆத்மாவினுடைய சிம்மாசனம் இந்த சரீரம் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். ஆத்மா இரு புருவங்களுக்கு மத்தியில் அமருகிறது. இது அழிவற்ற மூர்த்தியின் சிம்மாசனமாகும், அனைத்தும் உயிருள்ள அழிவற்ற சிம்மாசனமாக இருக்கிறது. அவர்கள் அழிவற்ற சிம்மாசனம் என்று அமிர்தசரசில் மரத்தினால்

செய்து விட்டார்கள். இருக்கின்ற மனிதர்கள் அனைவருக் கும் அவரவருடைய அழிவற்ற சிம்மாசனம் இருக்கிறது என்று பாபா புரிய வைத்திருக்கிறார். ஆத்மா வந்து இங்கே அமரு கிறது. சத்யுகமாக இருந்தாலும் சரி அல்லது கலியுகமாக இருந்தாலும் சரி, ஆத்மாவின் சிம்மாசனம் இந்த மனித சரீரமே ஆகும். எனவே எத்தனை அழிவற்ற சிம்மாசனங்கள் இருக்கின்றன. இருக்கின்ற மனிதர்கள் அனைவரும் அழிவற்ற ஆத்மாக்களின் சிம்மாசன மாகும். ஆத்மா ஒரு சிம்மாசனத்தை விட்டு விட்டு மற்றொன்றை எடுக்கிறது. முதலில் சிறியதாக இருகிறது பிறகு சிம்மாசனம் பெரியதாக ஆகிறது.இந்த சரீரம் எனும் சிம்மாசனம் சிறியது-பெரியதாக ஆகிறது, அது மரத்தினால் ஆன சிம்மாசனம் ஆகும், அதை சீக்கியர்கள் அழிவற்ற சிம்மாசனம் என்று சொல்கிறார்கள், அது சிறியது பெரியதாக ஆவதில்லை. இந்த புருவமத்தி என்பது மனிதர்கள் அனைவருடைய அழிவற்ற சிம்மாசனம் என்பது யாருக்கும் தெரிவதில்லை. ஆத்மா அழிவற்றது, ஒருபோதும் அழிவது கிடையாது. ஆத்மா விற்கு வித-விதமான சிம்மாசனம் கிடைக்கிறது. சத்யுகத்தில் உங்களுக்கு மிகவும் முதல்தரமான சிம்மாசனம் கிடைக்கிறது, அதனை கோல்டன் ஏஜ்டு சிம்மாசனம் என்று சொல்லப்படுகிறது. பிறகு அந்த ஆத்மாவிற்கு சில்வர், காப்பர், அயர்ன் ஏஜ்டு சிம்மாசனம் கிடைக்கிறது. பிறகு கோல்டன் ஏஜ்டு சிம்மாசனம் வேண்டும் என்றால் கண்டிப்பாக தூய்மையாக ஆக வேண்டும் ஆகையினால் பாபா கூறுகின்றார், என்னை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் உங்களுடைய அழுக்கு நீங்கி விடும். பிறகு உங்களுக்கு அப்படிப்பட்ட தெய்வீக சிம்மாசனம் கிடைக்கும். இப்போது பிராமண குலத்தின் சிம்மாசன மாக இருக்கிறது. புருஷோத்தம சங்கம யுகத்தின் சிம்மாசனமாக இருக்கிறது. பிறகு ஆத்மாவாகிய எனக்கு இந்த தேவதை சிம்மாசனம் கிடைக்கும். இந்த விஷயங்களை உலகத்திலுள்ள மனிதர்கள் தெரிந்திருக்க வில்லை. தேக-அபிமானத்தில் வந்த பிறகு தங்களுக் குள் துக்கம் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள், ஆகையினால் இதனை துக்க தாமம் என்று சொல்லப்படுகிறது. சாந்திதாமத்தை நினைவு செய்யுங்கள், அது உங்களுடைய உண்மையான வசிப்பிடம் என்று பாபா இப்போது குழந்தை களுக்குப் புரிய வைக்கின்றார். சுகதாமத்தை நினைவு செய்யுங்கள், துக்கதாமத்தை மறந்து கொண்டே செல்லுங்கள், இதன் மீது வைராக்கியம் வைக்க வேண்டும். அதற்காக சன்னியாசி களைப் போல் வீடு- வாசலை விட வேண்டும் என்பது கிடையாது. அது ஒருபுறம் நல்லது என்றாலும் மற்றொரு புறம் கெட்டது என்று பாபா புரிய வைக்கின்றார். உங்களுடையது தான் நல்லதாகும். அவர்களுடைய ஹடயோகம் நல்லதாயினும் கூடவே கெட்டதுமாகும், ஏனென்றால் தேவதைகள் இறங்கும் மார்க்கத்தில் செல்கிறார்கள் என்றால் பாரதத்தை தாங்கு வதற்கு கண்டிப்பாக தூய்மை வேண்டும். எனவே அதில் கூட உதவி செய்கிறார்கள். பாரதம் தான் அழிவற்ற கண்ட மாக இருக்கிறது. பாபாவும் கூட இங்கு தான் வர வேண்டியிருக்கிறது. எனவே எல்லை யற்ற தந்தை எங்கு வருகிறாரோ, அது அனைத்திலும் பெரிய தீர்த்தமாகி விட்டது அல்லவா? அனைவருக்கும் சத்கதியை பாபா வந்து ஏற்படுத்துகின்றார், ஆகையினால் பாரதம் தான் உயர்ந்ததிலும் உயர்ந்த தேசமாகும்.

முக்கியமான விஷயத்தை பாபா புரிய வைக்கின்றார் - குழந்தைகளே, நினைவு யாத்திரை யில் இருங்கள். கீதையில் கூட மன்மனாபவ என்ற வார்த்தை இருக்கிறது, ஆனால் பாபா ஒன்றும் சமஸ்கிருதம் சொல்வதில்லை. பாபா

மன்மனாபவ என்பதின் அர்த்தத்தைக் கூறு கின்றார். தேகத்தின் அனைத்து தர்மங்களையும் விட்டு விட்டு தங்களை ஆத்மா என்று நிச்சயம் செய்யுங் கள். ஆத்மா அழிவற்றதாக இருக்கிறது, அது ஒருபோதும் சிறியதாக- பெரியதாக ஆவதில்லை. ஆரம்பமும் முடிவுமற்ற - அழிவற்ற நடிப்பு ஆத்மாவில் நிரம்பி யுள்ளது. நாடகம் உருவாக்கப் பட்டுள்ளது. கடைசியில் வரக்கூடிய ஆத்மாக்களுக்கு மிகவும் குறைந்த நடிப்பே இருக்கிறது. மற்ற நேரம் சாந்திதாமத்தில் இருக்கிறது. சொர்க்கத்தில் வர முடியாது. கடைசியில் வரக் கூடியவர்கள் அங்கேயே கொஞ்சம் சுகம், அங்கேயே கொஞ்சம் துக்கத்தையும் அடைகிறார்கள். எப்படி தீபாவளி நாளில் எவ்வளவு அதிக கொசுக்கள் வருகின்றன, காலையில் விழித்துப் பார்த்தால் அனைத்தும் கொசுக்களும் இறந்திருக்கும். அவ்வாறே மனிதர்களுக்கும் கூட ஆகும், கடைசியில் வரக்கூடியவர்களுக்கு என்ன மதிப்பிருக்கும்? விலங்கு களைப் போலவே ஆவர். எனவே பாபா இந்த சிருஷ்டி சக்கரம் எவ்வாறு சுற்றுகிறது என்பதைப் புரிய வைக் கின்றார். மனித சிருஷ்டி எனும் மரம் சிறியதிலிருந்து பெரியதாக, பெரியதிலிருந்து சிறியதாக எப்படி ஆகிறது. சத்யுகத்தில் எவ்வளவு குறைந்த மனிதர்கள் இருக்கிறார்கள், கலியுகத்தில் எவ்வளவு வளர்ந்து மரம் பெரியதாகி விடுகிறது. முக்கியமான விஷயம், குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று பாபா சமிக்ஞை காட்டியுள்ளார். 8 மணி நேரம் நினைவில் இருக்க பயிற்சி செயுங்கள். நினைவு செய்து-செய்து கடைசியில் தூய்மை யாக ஆகி பாபாவிடம் சென்று விடுவீர்கள் என்றால், ஸ்காலர்ஷிப் (உதவி) கூட கிடைக்கும். ஒருவேளை பாவம் குறையாமல் நின்று விட்டால் பிறகு மீண்டும் பிறவி எடுக்க வேண்டி வரும். தண்டனைகளை அனுபவிப்பார்கள், பிறகு பதவியும் குறைந்து விடுகிறது. அனைவரும் கணக்கு-வழக்குகளை முடிக்க வேண்டும். மனிதர்கள் அனைவரும் இப்போது வரை பிறவி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த சமயத்தில் பார்த்தீர்கள் என்றால் பாரத வாசிகளை விட கிறிஸ்துவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அவர்கள் இன்னும் புத்திசாலிகளாகவும் இருக்கிறார்கள். பாரதவாசிகள் 100 சதவீதம் புத்திசாலிகளாக இருந்தனர், இப்போது புத்தியற்றவர்களாக ஆகி விட்டார்கள், ஏனென்றால் இவர்கள் தான் 100 சதவீதம் சுகத்தை அடைகிறார்கள் பிறகு 100 சதவீதம் துக்கத்தையும் அடைகிறார்கள். அவர்கள் பின்னால் தான் வருகிறார்கள்.

கிறிஸ்துவ இராஜ்யத்திற்கும் கிருஷ்ண இராஜ்யத்திற்கும் சம்மந்தம் இருக்கிறது என்று பாபா புரிய வைத்திருக்கிறார். கிறிஸ்தவர்கள் தான் இராஜ்யத்தை அபகரித்தார்கள் பிறகு, கிறிஸ்தவ இராஜ்யத்திடமிருந்து தான் இராஜ்யம் கிடைக்க வேண்டும். இந்த சமயத்தில் கிறிஸ்தவர்களின் ஆதிக்கம் இருக்கிறது. அவர்களுக்கு பாரதத்திலிருந்து தான் உதவி கிடைக்கிறது. இப்போது பாரதம் பட்டினியாக இருக்கிறது எனும்போது அங்கிருந்து பதிலுக்கு சேவை நடந்து கொண்டி ருக்கிறது. இங்கிருந்து நிறைய செல்வம், நிறைய வைர-வைடூரியங் கள் போன்றவை அங்கே எடுத்துச் சென்று விட்டார்கள். அதிக செல்வந்தர்களாகி விட்டார்கள் எனும்போது இப்போது செல்வத்தை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சந்திக்க வேண்டியதில்லை. இப்போது குழந்தைகளாகிய உங்களை யாரும் அறிந்து கொள்வதில்லை. ஒருவேளை அறிந்து கொண்டார் கள் என்றால் வந்து வழி கேட்பார்கள். நீங்கள் ஈஸ்வரிய சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர் களாவீர்கள், நீங்கள் ஈஸ்வரனுடைய வழிப்படி

நடக்கின்றீர்கள். அவர்களே தான் பிறகு ஈஸ்வரிய சம்பிரதாயத்திலிருந்து தெய்வீக சம்பிரதாயத்தவர்களாக ஆவார்கள். பிறகு சத்திரிய, வைசிய, சூத்திர சம்பிரதாயத்தவர்களாக ஆவார்கள். இப்போது நாம் தான் பிராமணர் களாக இருக்கிறோம் பிறகு நாம் தான் தேவதை களாக, நாம் தான் சத்திரியர்களாக ஆவோம்....... நான் தான் அது என்பதின் அர்த்தத்தைப் பாருங்கள் எவ்வளவு நன்றாக இருக்கிறது. இது குட்டிகர்ண விளையாட்டாகும், இதைப் புரிந்து கொள்வது மிகவும் சகஜமாகும். ஆனால் மாயை மறக்கச் செய்து விடுகிறது, பிறகு தெய்வீக குணங்களிலிருந்து அசுர குணங்களுக்கு கொண்டு வருகிறது. தூய்மையற்றவர் களாக ஆவது அசுர குணம் அல்லவா? நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ஸ்காலர்ஷிப் வாங்குவதற்கு (உதவி பெறுவதற்கு) குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே குறைந்ததிலும் குறைந்தது 8 மணி நேரம் பாபாவை நினைவு செய்வதற்கான பயிற்சி செய்ய வேண்டும். நினைவின் பயிற்சியின் மூலம் தான் பாவம் அழியும் மற்றும் கோல்டன் ஏஜ்டு (சத்யுக சரீரம்) சிம்மாசனம் கிடைக்கும்.

2) இந்த துக்கதாமத்திலிருந்து எல்லையற்ற வைராக்கியம் வைத்து தங்களுடைய உண்மையான இருப்பிடமான சாந்திதாமம் மற்றும் சுகதாமத்தை நினைவு செய்ய வேண்டும். தேக-அபிமானத்தில் வந்து யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது.

வரதானம்: கர்மத்தின் கணக்கு வழக்குகளை புரிந்து தன்னுடைய ஆடாத ஸ்திதியை உருவாக்கக் கூடிய சகஜ யோகி ஆகுக!

வாழ்வில் சில நேரம் எதாவது கர்மத்தின் கணக்கு வழக்கு முன்னால் வருகின்றது என்றால் அதன் காரணமாக மனதை அசைக்காதீர்கள், ஸ்திதியை மேலே கீழே ஆக்காதீர்கள். வந்து விட்டது எனில் அதை கண்டறிந்து தொலைவிலிருக்கும் போதே அழித்து விடுங்கள். இப்போது யுத்தம் செய்பவராக ஆகாதீர்கள். சர்வ சக்திவான் பாபா துணையாக இருக்கின்றார் எனும் போது மாயை உங்களை அசைக்க முடியாது. அதற்கு நிச்சயத்தின் அஸ்திவாரத்தை நடை முறையில் கொண்டு வாருங்கள் மேலும் நேரப்படி பயன்படுத்துங்கள் அப்போது சகஜ யோகியாக ஆகி விடுவீர்கள். இப்போது நிரந்தரமான யோகி ஆகுங்கள், யுத்தம் செய்யக் கூடிய யுத்த வீரன் அல்ல.

சுலோகன்: டபுள் லைட்டாக இருக்க வேண்டும் என்றால் தன்னுடைய அனைத்து பொறுப்புகளின் சுமையை பாபாவிடம் ஒப்படைத்து விடுங்கள்.